# வனவாசி பெருமித தினம் | பிர்சா முண்டா பிறந்த நாளில் குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மரியாதை



பிர்சா முண்டா நினைவிடத்தில் மரியாதை செலுத்தும் பிரதமர் மோடி

**புதுடெல்லி:** வனவாசி சமூக சுதந்திரப் போராட்ட வீரர் பிர்சா முண்டாவின் பிறந்த நாளை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா உள்ளிட்டோர் அவரது உருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

வனவாசி சமூகத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் பிர்சா முண்டாவின் பிறந்த நாள் வனவாசி பெருமித தினமாக இன்று கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தை முன்னிட்டு, டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள பிர்சா முண்டாவின் உருவச் சிலைக்கும், அதன் அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது உருவப்படத்துக்கும் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, மத்திய அமைச்சர் மீனாட்சி லேகி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதையடுத்து, அங்கு நடைபெற்ற வனவாசி மக்களின் பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து

கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ஏராளமான வனவாசி மக்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மீனாட்சி லேகி, வனவாசி பெருமித தினம் மத்திய அரசு சார்பில் கொண்டாடப்படுகிறது. நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் வனவாசி மக்கள் மிகப் பெரிய பங்களிப்பை அளித்துள்ளனர். அவர்களின் பங்களிப்பு ஒவ்வொருவரையும் பெருமை கொள்ளச் செய்கிறது. வனவாசி மக்களின் முன்னேற்றத்துக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என தெரிவித்தார்.

பிர்சா முண்டாவின் பிறந்த இடமான ஜார்க்கண்ட் மாநிலம் குந்தி மாவட்டத்தில் உள்ள உலிஹாட்டுவில் உள்ள அவரது நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி நேரில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதையடுத்து, அந்த கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள மிகப் பெரிய பிர்சா முண்டாவின் சிலைக்கு பிரதமர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதையடுத்து, குந்தியில் நடைபெற்ற கண்காட்சியை பிரதமர் மோடி பார்வையிட்டார்.

**'ஸ்மார்ட் சிட்டி' தரவரிசையில் குஜராத்தின் சூரத் முதலிடம்: தமிழகத்தின் மதுரை 8-வது இடம்**



**புதுடெல்லி:** திட்டங்கள் நிறைவு மற்றும் நிதிப் பயன்பாடு தொடர்பான 'ஸ்மார்ட் சிட்டி' தரவரிசையில் குஜராத்தின் சூரத் முதலிடத்தில் உள்ளது. தமிழகத்தின் மதுரை 8-வது இடத்தை பிடித்துள்ளது. இந்தியாவின் 100 நகரங்களில் உள்கட்டமைப்பை மேம்படுத்தி, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக 'ஸ்மார்ட் சிட்டி' திட்டம் மத்திய அரசால் கடந்த 2015-ல் கொண்டுவரப்பட்டது.

2016 ஜனவரி முதல் 2018-ம் ஆண்டு ஜூன் வரை பல்வேறு சுற்று போட்டியின் மூலம் 100 நகரங்கள் இத்திட்டத்துக்கு தேர்வு செய்யப்பட்டன. இந்த நகரங்கள் தங்களின் அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் 5 ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என மத்திய அரசு எதிர்பார்க்கிறது. கடந்த மே மாதம், இந்த நகரங்கள் தங்கள் திட்டப் பணிகளை முடிப்பதற்கான காலக்கெடுவை 2024 ஜூன் வரை மத்திய அரசு நீட்டித்தது.


இந்த காலக்கெடு நெருங்கிவரும் நிலையில் திட்டங்கள் நிறைவு, நிதிப் பயன்பாடு மற்றும்பிற அளவுகோல்கள் அடிப்படையில் 'ஸ்மார்ட் சிட்டி' நகரங்களின் தரவரிசை வெளியாகியுள்ளது.

இதில் முதல் 10 நகரங்கள் பட்டியலில் குஜராத் மாநிலத்தின் சூரத் முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து ஆக்ரா (உ.பி), அகமதாபாத் (குஜராத்), வாரணாசி (உ.பி), போபால் (ம.பி), ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

துமக்குரு (கர்நாடகா), உதய்பூர் (ராஜஸ்தான்), மதுரை (தமிழ்நாடு), கோட்டா (ராஜஸ்தான்), சிவமோகா (கர்நாடகா) ஆகியவை முதல் 10 நகரங்கள் பட்டியலில் உள்ள மற்ற நகரங்கள் ஆகும்.

இதற்கு மாறாக யூனியன் பிரதேசங்கள் மற்றும் வடகிழக்கு மாநில நகரங்கள் மிகவும் பின்தங்கியுள்ளன

## இந்தோனேசியாவில் 10-வது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாடு: நவ.16-ல் ராஜ்நாத் சிங் பங்கேற்பு



**புதுடெல்லி:** இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் நாளை மறுநாள் (நவ.16) நடைபெறும் 10-வது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்.

இது தொடர்பாக அரசு தரப்பு வெளியிட்ட தகவல்: இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் 10-வது ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் நவம்பர் 16 முதல் 17 வரை அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார். நவம்பர் 16-ஆம் தேதி நடைபெறும் இந்த சந்திப்பின்போது, பிராந்திய மற்றும் சர்வதேச பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சர் மன்றத்தில் உரையாற்றுகிறார். இந்தோனேசியா, ஏ.டி.எம்.எம்-பிளஸ் தலைவராக இருப்பதால் இந்தக் கூட்டத்தை அந்நாடு நடத்துகிறது.

ஏ.டி.எம்.எம்-பிளஸ் மாநாட்டின் போது, ராஜ்நாத் சிங், பங்கேற்கும் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுடன் இருதரப்பு சந்திப்புகளை நடத்துவார். பரஸ்பர இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த பாதுகாப்பு ஒத்துழைப்பு விஷயங்கள் குறித்து விவாதிப்பார். ஏ.டி.எம்.எம் என்பது ஆசியான் அமைப்பில் உள்ள

நாடுகளின் மிக உயர்ந்த பாதுகாப்பு ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பாகும். ஆசியான் உறுப்பு நாடுகளான புருனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசு, மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் மற்றும் அதன் எட்டு உரையாடல் கூட்டாளிகளான இந்தியா, அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஜப்பான், தென் கொரியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒரு தளமாக ஏ.டி.எம்.எம்-பிளஸ் உள்ளது.

1992-ஆம் ஆண்டில் ஆசியான் அமைப்பின் உரையாடல் கூட்டாளியாக இந்தியா மாறியது. அக்டோபர் 12, 2010 அன்று வியட்நாமின் ஹனோயில் முதல் ஏடிஎம்எம்-பிளஸ் கூட்டப்பட்டது. 2017 முதல் ஆசியான் மற்றும் கூடுதல் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக ஏடிஎம்எம்-பிளஸ் அமைச்சர்கள் ஆண்டுதோறும் சந்தித்து வருகின்றனர்.

கடல்சார் பாதுகாப்பு, ராணுவ மருத்துவம், சைபர் பாதுகாப்பு, அமைதி காக்கும் நடவடிக்கைகள், பயங்கரவாத எதிர்ப்பு, மனிதாபிமான சுரங்கச் செயல்பாடு, மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் ஆகிய ஏழு நிபுணத்துவப் பணிக் குழுக்கள் மூலம் உறுப்பு நாடுகளுக்கு இடையிலான நடைமுறை ஒத்துழைப்பை ஏ.டி.எம்.எம்-பிளஸ் மேம்படுத்துகிறது. 10-வது ஏடிஎம்எம்-பிளஸ் மாநாட்டின்போது, 2024-2027-ஆம் ஆண்டுக்கான அடுத்த இணை அமர்வுகளும் அறிவிக்கப்படும். 2021-2024 வரையிலான தற்போதைய சுழற்சியில், இந்தோனேசியாவுடன் இணைந்து மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணத்தில் நிபுணத்துவப் பணிக் குழுக்களுக்கு இந்தியா இணை தலைமை வகிக்கிறது.

## பட்டாசு புகை எதிரொலி: உலகின் மிகவும் மாசுபட்ட 10 நகரங்களில் ஒன்றானது டெல்லி; மேலும் 2 இந்திய நகரங்களும் இடம்பிடித்தன



**புதுடெல்லி:** தீபாவளிக்கு பட்டாசு வெடித்ததால் காற்றில் புகை மூட்டம் அதிகமானதால் உலகின் மிகவும் மாசுபட்ட 10 நகரங்களின் பட்டியிலில் டெல்லி இடம் பெற்றுள்ளது. மேலும் இரண்டு இந்திய நகரங்களும் இந்தப் பட்டியலில் இணைந்துள்ளன.

தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தில் பட்டாசுக்கு தனி இடம் உண்டு. பட்டாசு வெடிக்கப்படுவதால் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுவது போல இந்த ஆண்டும் தேசியத் தலைநகர் காற்று மாசு அளவில் முதலிடம் பிடித்தது. ஸ்விஸ் குழுவின் காற்று தரக்குறியீட்டு அளவின் படி, டெல்லியில் காற்றின் தரக் குறியீடு 420 ஆக, ஆபத்தானது என்ற நிலையில் இருந்தது. ஆனால் இந்த முறை டெல்லியுடன், முதல் 10 இடங்களில் கொல்கத்தாவும், மும்பையும் இணைந்துள்ளன. கொல்கத்தா 196 என்ற காற்று தரக்குறியீட்டுடன் 4வது இடத்திலும், இந்தியாவின் வர்த்தக நகரமான மும்பை 163 என்ற காற்று தரக்குறியீட்டுடன் 8வது இடத்திலும் இருக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை இரவு முதலே டெல்லியில் அடர்த்தியான புகை மண்டலம் உண்டாகி காற்றின் தரம் 680 என்ற மிகவும் ஆபத்தான நிலை என்பதைக் கடந்தது. ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி கொண்டாட்டத்தின் போது டெல்லியில் பட்டாசு வெடிக்க தடைவிதித்தாலும் அந்த தடை தீவிரத்துடன்

அமல்படுத்தப்படுவதில்லை. இதனால் டெல்லியில் தீபாவளிக்கு மறுநாள் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்து வருகிறது.

இந்தியாவில் ஒவ்வொரு குளிர் காலத்துக்கு முன்பாகவும் காற்றின் தரம் மிகவும் மோசமடைகிறது. குளிர்ந்த காற்று, வாகனங்களின் புகை, தொழில்சாலைகள், கட்டுமானப் பணி தூசு மற்றும் வேளாண்மை கழிவுகளைகளை எரித்தல் போன்ற காரணிகளால் காற்று மாசு அடைகிறது.

இதனிடையே டெல்லியில் கடந்த வாரத்தில் மிகவும் மோசம் என்ற நிலையில் நீடித்து வந்த காற்றின் தரம் வெள்ளிக்கிழமை பெய்த மழையால் சற்றே மேம்பட்டிருந்தது. இதனால் ஒற்றை - இரட்டை இலக்க திட்டத்தை அதிகாரிகள் ஒத்திவைத்தனர். தீபாவளிக்கு பிறகான காற்று மாசு அதிகரிப்பால் மீண்டும் அதனை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் திட்டமிட்டு வருகின்றனர்.

.

காற்றின் தரக் குறியீடு400 - 500 ஆக இருந்தால், காற்று மிகவும் மாசடைந்து இருப்பதாக அர்த்தம். இந்த நிலையில் ஆரோக்கியமானமனவர்களும் பாதிப்படையும் நிலை ஏற்படும். காற்றின் தரம் 0 - 50 வரையில் இருந்தால், நன்றாக இருப்பதாக அர்த்தம்.

**டெல்லியில் இன்றைய நிலவரம்:** டெல்லியில் இன்று (நவ.13) காலை 7 மணிக்கு காற்றின் தரக்குறீயிடு 275 ஆக மோசம் என்ற நிலையில் இருந்தது. இதனிடையே ஷாதிபூரிலர் 315, அயநகரில் 311, லோதி சாலையில் 308, புசாவில் 355, ஜஹாங்கீர்பூரியில் 333 என மிகவும் மோசம் என்ற நிலையில் காற்றின் தரம் இருந்தது.